திருச்செங்கோடு நகராட்சி

## திருச்செங்கோடு நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம் :

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருச்செங்கோடு நகருக்கு வருகைப்புரிந்து பல்வேறு நலத்திட்டப்பணிகளை துவங்கி வைக்க உள்ளார்கள். மேலும், திருச்செங்கோடு நகராட்சியில் உள்ள நீர்நிலைகளை மேம்படுத்தும் பணிகள், சாலை பணிகள் மற்றும் இதர பல்வேறு திட்ட பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய பரிந்துரைத்தற்கும் மற்றும் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தெப்பத்தேர் திருவிழா மற்றும் தைப்பூசத் தேர் திருவிழாவினை நடத்துவதற்கு உரிய அனுமதி பெற்று தந்ததற்கும் நன்றி தெரிவித்தும், திருச்செங்கோடு நகருக்கு வருகை புரியும் சமயத்தில் அனைத்து உறுப்பினர்களின் சார்பாக சிறப்பான வரவேற்பு வழங்கவும் இந்நகர்மன்றம் தீர்மானிக்கிறது.

**பொருள் எண்.1**

அரசாணை (நிலை) எண்.116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ME.3), நாள்.24.08.2022-இன்படி, மாநகராட்சி / நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரர் மூலம் மூன்று ஆண்டு காலத்திற்கு மேற்கொள்ளவும், அதற்கான அனுமதியை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, திருச்செங்கோடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ள கருத்துருக்கள் 27.12.2022 அன்று சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநகரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

அதன்படி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.34638/2022/EA-2-SWM-6, நாள்.10.01.2023-இல் திருச்செங்கோடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரர் மூலம் மூன்று ஆண்டு காலம் மேற்கொள்ள ஏதுவாக தினசரி உருவாகும் குப்பைகளின் அடிப்படையில் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது:-

<u>தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரர் மேற்கொள்ள வேண்டிய திடக்கழிவு மேலாண்மை பணிகளின் விவரம்:-</u>

| S.No | Description of the activity | Nos. |
|---|---|---|
| 1 | Door to Door collection of segregated waste from Households using BOVs and handover the waste to processing center / handling facilities | 22526 Households |
| 2 | Door to Door collection of segregated waste from Households using LCV and handover the waste to processing center / handling facilities | 15018 Households |
| 3 | Door to Door collection of segregated waste in small size Commercial Establishment using Low Commercial Vehicle and handover the waste to processing center / handling facilities | 1816 Commercial Establishments |
| 4 | Door to Door collection of segregated waste in larger size Commercial Establishment using High Commercial Vehicle and handover the waste to processing center / handling facilities | 1210 Commercial Establishments |

**மேற்கண்ட பணிகளுக்கான மதிப்பீடுகள்:–**

| Name of Municipality | Quantity of waste Generated (TPD) | Rate per Tonne (in Rs) | Estimated Base cost per day (Rs. in Lakh) | Estimated base cost per year (Rs. in Lakh) | Applicable GST 18% and LWF 1% (Rs. in Lakh) | Estimated total cost per year (Rs. in Lakh) |
|---|---|---|---|---|---|---|
| Tiruchengode | 36.72 | 4715.42 | 1.73 | 632.06 | 120.09 | 752.15 |

மேற்கண்டவாறு, திருச்செங்கோடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரர் மேற்கொள்ளும் பணிக்கு, அனைத்து வரிகள் மற்றும் சேவைக்கட்டணத்துடன் ஓராண்டுக்கு ஆகும் செலவினம் ரூ.752.15 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி செயல்முறை ஆணையில், திடக்கழிவு மேலாண்மை பணிகள் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளவுள்ளதால், இந்நகராட்சியில் ஏற்கனவே உபயோகத்தில் உள்ள கீழ்கண்ட வாகனங்களை தினசரி வாடகை அடிப்படையில் தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரருக்கு வழங்கவும், மற்றும் இந்நகராட்சியின் தற்போது பணிபுரியும் 116 நிரந்தர பணியாளர்களை கீழ்கண்டவாறு இதர அன்றாட பணிகளுக்கு பயன்படுத்தவும் ஆணையிடப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:–

**நகராட்சி வாகனங்களை தினசரி வாடகை அடிப்படையில் தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரருக்கு வழங்கும் விவரம்:–**

(Details of Available Vehicles)

| Category | Available Vehicles Nos | After ULB use available for Rent | Rent fixed per day | Collectable Rent per day |
|---|---|---|---|---|
| BOV | 30 | 28 | 100 | 2800 |
| LCV | 6 | 2 | 200 | 400 |
| HCV | 4 | 1 | 400 | 400 |
| **Total** | **40** | **29** | **–** | **3600** |

**இதர அன்றாட பணிகளுக்கு பயன்படுத்தும் நகராட்சி நிரந்தர பணியாளர்கள் விவரம்:–**

(Details of Permanent workers proposed to engage in regular service)

| Activity | No of Permanent Sanitary Worker assigned | Type | LCV | HCV |
|---|---|---|---|---|
| Park Sweeping | 5 | – | – | – |
| For Bus stand | 10 | LCV | 1 | – |
| For Market | 14 | LCV/HCV | 1 | 1 |
| Bushes removal | 4 | | | |
| Shoulder earth removal | 3 | HCV | – | 1 |
| For drain cleaning | 14 | | | |
| CT/PT Toilets @ 4 per location | 11 | – | – | – |

| | | | | |
|---|---|---|---|---|
| For fogging and anti malarial | 7 | LCV | 1 | – |
| For road sweeping | 38 | LCV/HCV | 1 | 1 |
| MCC processing centre | 10 | – | – | – |
| **Total** | **116** | – | **4** | **3** |

திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ள மூன்று ஆண்டு காலத்திற்கு ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரருக்கு முதல் ஆண்டிற்கு மட்டும் பணி ஒப்பந்த ஆணை வழங்கவும், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு ஒப்பந்ததாரர் பணியின் செயல்பாட்டு திறன் மற்றும் தரத்தின் அடிப்படையில் திருப்தி ஏற்படின் (Based on the performance satisfication) ஒவ்வொரு ஆண்டாக நகர்மன்றத்தின் இசைவு பெற்று பணி ஒப்பந்த ஆணை வழங்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஒப்பந்த அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள உள்ள தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரரே திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தேவைப்படும் பணியாளர்கள் மற்றும் உபாகரணங்களுக்கு பொறுப்பாவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, திருச்செங்கோடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரர் மூலம் மூன்று ஆண்டு காலம் மேற்க்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும், அனைத்து வரிகள் மற்றும் சேவைக்கட்டணத்துடன் ஓராண்டுக்கு ஆகும் செலவினம் ரூ.752.15 இலட்சத்தை இந்நகராட்சி பொது நிதி மற்றும் 15வது மத்திய நிதி ஆணையம் (SWM Tied Grant sanctioned under 15th CFC) நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதி மற்றும் 15வது மத்திய நிதி ஆணையம் (SWM Tied Grant sanctioned under 15th CFC) நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>கோப்பு எண்.7128/2021/ இ1</u>

<u>நகர்மன்ற தீர்மானம் எண். 489 நாள்.23.01.2023.</u>
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.2**

நகர்மன்ற தீர்மானம் எண்.312, நாள்.30.08.2022-இன்படி ரூ.9,50,000/-திற்கு கீழ்கண்ட பணியை குடிநீர் நிதி 2022-2023-இன் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதன்படி 12.01.2023 அன்று நடைப்பெற்ற இரண்டாம் அழைப்பு ஒப்பந்தப்புள்ளியில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :-

| வ. எண் | பணியின் பெயர் / மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| 1 | திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட சாலைகளில் குடிநீர் குழாய் பழுதுகளை சரிசெய்ய வெட்டப்பட்ட தார்சாலை / சிமெண்ட் சாலை / பேவர் சாலைகளை சீரமைக்கும் பணி **மதிப்பீடு ரூ.9.50 இலட்சம்** | 1. M/s Plus max Infrastrucure Pvt ltd, திருச்செங்கோடு<br>2. M/s Sri Sai Agencies, திருச்செங்கோடு. | மதிப்பீட்டை விட (−)0.41 % குறைவு<br>மதிப்பீட்டை விட (+)0.51 % அதிகம் |

மேற்படி, பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட(−)0.41% குறைவாக கொடுத்துள்ள M/s Plus max Infrastrucure Pvt ltd, திருச்செங்கோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**<u>கோப்பு எண்.5639/2022/இ1</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 490 நாள்.23.01.2023.</u>**

மதிப்பீட்டை விட(−)0.41% குறைவாக கொடுத்துள்ள கொடுத்துள்ள, M/s Plus max Infrastrucure Pvt ltd, திருச்செங்கோடு என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை பதிவு செய்யப்பட்டது

**பொருள் எண்.3**

திருச்செங்கோடு நகராட்சியில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஒரு சில பிரதான மழைநீர் வடிகால்கள் தூர் வாரிட வேண்டியது அவசியமாக உள்ள நிலையில் பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்ட ஜே.சி.பி. வாகனம் பழுதாகி உள்ளது.

தற்சமயம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் காணொலி ஆய்வுக்கூட்டங்களின் அறிவுரையின் படியும், நகர்மன்ற கூட்டத்தில் நகர்மன்ற உறுப்பினர்கள் தங்களது வார்டுகளிலும், பொது இடங்களிலும் உள்ள பெரிய கால்வாய்கள் தூர்வாரும் பணிக்கு ஜே.சி.பி. இயந்திரம் கேட்டு வருவதாலும் மேற்படி பணியின் அத்தியாவசிய அவசர அவசியம் கருதியும் பொது மக்கள் நலன் கருதி பணி மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளதால் அரசு சார்பு நிறுவனமான திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் மூலம் வழங்கப்படும் விலைப்புள்ளியினை ஏற்று வாடகை அடிப்படையில் ஜே.சி.பி. இயந்திரத்தினை எடுத்து பணி செய்யவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதி அரசு சார்பு நிறுவனமான திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவிடலாம்.

**ந.க.எண். 3063/2022/எச்1**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 491 நாள்.23.01.2023.</u>**
அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.4**

திருச்செங்கோடு நகராட்சியில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தாழ்வான குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் தேங்கும் நிலையில் உள்ள இடங்களிலும், பள்ளிகள் மற்றும் பிரதான பகுதிகளிலும் தொற்று நீக்க பணிகள் மேற்கொள்ள கிருமி நாசினிகள் மற்றும் தொற்று நீக்கிகள் தேவைப்படுகிறது.

தற்போது தேவைப்படும் கிருமி நாசினிகள் மற்றும் தொற்று நீக்கிகளின் இருப்பு குறைவாக உள்ளதால், பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதி கீழ்கண்ட அளவு தேவைப்படும் கிருமி நாசினிகள் மற்றும் தொற்று நீக்கி மருந்துகளை தமிழ்நாடு அரசு சார்பு நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று கொள்முதல் செய்து கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது :-

| வ.எண். | கிருமி நாசினிகளின் விபரம் | தேவைப்படும் அளவு |
|---|---|---|
| 1. | நீர்த்த சுண்ணாம்புத்தூள் | 10 டன் |
| 2. | பிளீச்சிங் பவுடர் 33% குளோரின் | 1 டன் |
| 3. | பி.டி.பவுடர் | 30 கிலோ |
| 4. | கருப்பு பிளாயில் | 100 லிட்டர் |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதி அரசு சார்பு நிறுவனமான திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவிடலாம்.

**ந.க.எண். 3064/2022/எச்1**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 492 நாள்.23.01.2023.</u>**
அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.5**

திருச்செங்கோடு நகராட்சி பகுதிகளில் தினசரி சேகரமாகும் குப்பைகளை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தரம் பிரித்து நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நுண் உர கலவை மையங்களில் இயற்கை உரமாக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ஒவ்வொரு நுண் உர கலவை மையங்களிலும் உற்பத்தி செய்யப்படும் இயற்கை உரங்களை எடை போடவும் மற்றும் நகர் பகுதியில் சேகரிக்கப்பட்ட அபாயகரமான கழிவுகளை எரியூட்டவும் 5 நுண் உர கலவை மையங்களுக்கும் மற்றும் 2 உலர் கழிவு மையத்திற்கும் தேவைப்படும் எடை போடும் இயந்திரம் (Weight Machine) 7 எண்ணிக்கை மற்றும் எரியூட்டும் இயந்திரம் (Incinerator) 7 எண்ணிக்கையில் அரசு சார்பு நிறுவனத்திடம் விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்து கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவிடலாம்.

**ந.க.எண். 260/2023/எச்1**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 493 நாள்.23.01.2023.</u>**
அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

அரசாணை நிலை எண் : 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கள் துறை நாள் : 05.04.2013–ன் படி, நகர் பகுதிகளில் சுற்றித் திரியும் தெரு நாய்களை பிடித்து அறுவை சிகிச்சை செய்து வெறிநாய் தடுப்பூசி போடும் பணியினை அரசாணையில் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தில் இந்திய விலங்கு நல வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட அறக்கட்டளைகள் மூலம் பணி மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.

தற்போது தெருநாய்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால் சாலைகளில் அதிகபடியான விபத்துகள் ஏற்படுவதுடன் பொதுமக்களுக்கும் பெருமளவு இடையூறு ஏற்படுவதாக புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே, பொதுமக்களின் நலனில் முக்கியத்துவம் கருதி திருச்செங்கோடு நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் சுற்றித் திரியும் தெரு நாய்களை பிடித்து அறுவை சிகிச்சை செய்து வெறிநாய் தடுப்பூசி போடும் பணியினை மேற்கொள்ள இந்திய விலங்கு நல வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட அறக்கட்டளையான வாய்ஸ் ஃபார் அனிமல் (VOICE FOR ANIMAL) சென்னை என்ற நிறுவனம் அரசாணையில் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தில் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ஒப்புதல் அளித்து விலைப்புள்ளி வழங்கியுள்ளது. இவ்விலை புள்ளியினை ஏற்று மேற்கண்ட அறக்கட்டளை நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதி இந்திய விலங்கு நல வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட அறக்கட்டளையான வாய்ஸ் ஃபார் அனிமல் (VOICE FOR ANIMAL) சென்னை என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம் .
3. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 5547/22/எச்1**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 494 நாள்.23.01.2023.</u>**
அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.7**

திருச்செங்கோடு நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் டெங்கு, சிக்குன்குன்யா போன்ற நோய் பரவலை தடுக்க புற ஆதார முறையில் தேவைப்படும் 140 DBC பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலம் மேற்காணும் பணியில் ஈடுபடுத்த ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர்,

சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் அலைபேசி வழி அறிவுறுத்தலின் படியும் அரசின் புதிய வழிகாட்டுதல் நெறிமுறைகளின் படியும் ஒப்பந்தபுள்ளி கோரி பணியாளர்களை பணியமர்த்தும் வரையில் புற ஆதார முறையில் ஒப்பந்தபுள்ளி கோரும் பணி 30.07.2021 –ல் மறு உத்தரவு வரும் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோவிட் – 19 மற்றும் டெங்கு தடுப்பு பணிகள் தேக்கமின்றி நடைபெறவும், பொதுசுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதியும் ஏற்கனவே இந்நகராட்சியில் தற்காலிகமாக பணிபுரிந்து வரும் 93 DBC பணியாளர்களை சமுதாய அமைப்பாளர் பரிந்துரை செய்த ஜே.ஜே. மகளிர் சங்கம் மூலம் 01.11.2021 முதல் அவ்வப்போது பணி நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணி நீட்டிப்பு காலம் 31.01.2023 அன்றுடன் முடிவடைய உள்ளது.

மேலும், புற ஆதார முறையில் Key Indicator மூலம் புதிய வழிகாட்டு நெறிமுறைகளின் படி திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.34638/2022/EA–2 –SWM–6 நாள்:10.01.2023–ன்படி நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவு வரப்பெற்றுள்ளது.

எனவே, நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு, சிக்குன்குன்யா மற்றும் கோவிட் – 19 போன்ற நோய்கள் பரவலை தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகள் தொய்வின்றி மேற்கொள்ள பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதி ஏற்கனவே சமுதாய அமைப்பாளர்களால் பரிந்துரை செய்யப்பட்டு DBC பணியாளர்களை மேற்காணும் பணிக்கு ஈடுபடுத்தி வரும் ஜே.ஜே.மகளிர் சங்கத்தினருக்கு 01.02.2023 முதல் 31.03.2023 வரை மேலும் இரண்டு மாதத்திற்கு மட்டும் ஏற்கனவே வழங்கிய பணி உத்தரவில் குறிப்பபிட்டுள்ள நிபந்தனைகளுடன் மேற்காணும் பணிக்கு ஈடுபடுத்தப்படும் பணியாளர்களுக்கு மாவட்ட அரசிதழிலில் வெளியிட்டுள்ளவாறு ஏற்கனவே வழங்கி வரும் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.380/– மற்றும் வேலை வழங்குபவர் செலுத்த வேண்டிய EPF 13 % மற்றும் ESI 3.25 % பங்குதொகை சேர்த்து ஆக மொத்தம் இரண்டு மாதத்திற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.25.07 இலட்சத்திற்கும், பணி நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கவும், 01.04.2023 முதல் மேற்படி ஜே.ஜே.மகளிர் சுய உதவி குழுவினை ரத்து செய்யவும், மேலும், அரசின் புதிய வழிகாட்டு நெறிமுறைகளின் படி Key Indicator மூலம் நிரந்தர தூய்மை பணியாளர்களை கொண்டே கொசு ஒழிப்பு புகை மருந்து தெளிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் எதிர்வரும் காலங்களில் DBC பணிக்கு பணியாளர்கள் தேவைப்படும் பட்சத்தில் அரசின் புதிய வழிகாட்டு நெறிமுறைகளின் படி புதிதாக ஒப்பந்தபுள்ளி கோரி ஒப்பந்ததாரரை தேர்வு செய்து ஒப்பந்ததாரர் மூலம் DBC பணியாளர்களை பணியமர்த்தி கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 01.04.2023 முதல் ஜே.ஜே.மகளிர் சுய உதவி குழுவினை ரத்து செய்யலாம்.
3. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 3289/2021/எச்1**

**நகர்மன்ற தீர்மானம் எண். 495 நாள்.23.01.2023.**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

.பொருள் எண்.8

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினசரி சேகரமாகும் குப்பைகளை புற ஆதார முறையில் 105 தூய்மை பணியாளர்களை கொண்டு தூய்மை பணி மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு அதன் அடிப்படையில் திரு.K.குமார் ஒப்பந்ததாரருக்கு 105 தனியார் தூய்மை பணியாளர்களை பணியில் ஈடுபடுத்த கடந்த 13.12.2018 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு நிர்வாக நலன் கருதியும், பொதுசுகாதார முக்கியதுவம் கருதியும் 31.01.2023 வரை அவ்வப்போது ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் நகர் மன்றத்தலைவர் அவர்களால் 29.12.2022-ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் புற ஆதார முறையில் தனியார் தூய்மை பணியாளர்களை வழங்கி வரும் திரு.கே.குமார் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தினை ரத்து செய்து புதிய ஒப்பந்தப்புள்ளி கோரிட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற உரிய பிரேரணைகள் தயார் செய்து அனுப்பிட தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக புற ஆதார முறையில் Key Indicator Performance மூலம் புதிய வழிகாட்டு நெறிமுறைகளின் படி தனியார் நிறுவனம்/ ஒப்பந்ததாரர் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள பிரேரணைகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு உரிய நிர்வாக அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதின் படி, தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.34638/2022/EA-2-SWM-6 நாள்:10.01.2023-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மன்றத்தின் அனுமதி பெற்று 31.01.2023-க்குள் ஒப்பந்தபுள்ளி கோரி 01.04.2023-லிருந்து திடக்கழிவு மேலாண்மை பணிகளை புதிய தனியார் நிறுவனம்/ ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிலையில் தற்போது திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தினை ரத்து செய்து, புதிய ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்புவது, அரசின் புதிய வழிகாட்டு நெறிமுறைகளுக்கு முரண்பாடானதாகும்.

எனவே, இச்சூழ்நிலையை கருத்தில் கொண்டு நிர்வாக நலன் கருதியும் மற்றும் பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதியும் தற்போது பணிபுரிந்து வரும் 105 தூய்மை பணியாளர்களை திரு.K.குமார் ஒப்பந்ததாரர் மூலம் தற்போது பெற்று வரும் நாளொன்றுக்கு நபரொன்றுக்கு ரூ.517.70/- என்ற ஊதிய விகிதத்தில் ஏற்கனவே வழங்கியுள்ள பணி உத்தரவில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்படுத்தி 01.02.2023 முதல் 31.03.2023 வரை இரண்டு மாத காலத்திற்கு மட்டும் ஒப்பந்தத்தினை நீடிப்பு செய்து 01.04.2023 முதல் ரத்து செய்யவும், அதன்படி பணி உத்தரவு வழங்கவும், அதற்காகும் செலவினத்தொகை ரூ.33.20 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

.

அலுவலகக் குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதி திரு.K.குமார் ஒப்பந்ததாரரின் ஒப்பந்த காலத்தினை 01.02.2023 முதல் 31.03.2023 வரை இரண்டு மாத காலத்திற்கு மட்டும் நீடிப்பு செய்து பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. 01.04.2023 முதல் மேற்படி ஒப்பந்ததாரரை ரத்து செய்யலாம்.
4. இச்செலவினத்தை SUC நிதி மற்றும் பொது நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.10838/2019/எச்1

நகர்மன்ற தீர்மானம் எண். 496 நாள்.23.01.2023.
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.9

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினசரி சேகரமாகும் குப்பைகளை புற ஆதார முறையில் 100 தூய்மை பணியாளர்களை கொண்டு தூய்மை பணி மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு அதன் அடிப்படையில் திரு.K.குமார் ஒப்பந்ததாரருக்கு 100 தனியார் தூய்மை பணியாளர்களை பணியில் ஈடுபடுத்த கடந்த 27.08.2019 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு நிர்வாக நலன் கருதியும், பொதுசுகாதார முக்கியதுவம் கருதியும் 31.01.2023 வரை அவ்வப்போது ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் நகர் மன்றத்தலைவர் அவர்களால் 29.12.2022–ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் புற ஆதார முறையில் தனியார் தூய்மை பணியாளர்களை வழங்கி வரும் திரு.கே.குமார் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தினை ரத்து செய்து புதிய ஒப்பந்தப்புள்ளி கோரிட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற உரிய பிரேரணைகள் தயார் செய்து அனுப்பிட தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக புற ஆதார முறையில் Key Indicator Performance மூலம் புதிய வழிகாட்டு நெறிமுறைகளின் படி தனியார் நிறுவனம்/ ஒப்பந்ததாரர் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள பிரேரணைகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு உரிய நிர்வாக அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதின் படி, தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.34638/2022/EA–2–SWM–6 நாள்:10.01.2023–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மன்றத்தின் அனுமதி பெற்று 31.01.2023–க்குள் ஒப்பந்தபுள்ளி கோரி 01.04.2023–லிருந்து திடக்கழிவு மேலாண்மை பணிகளை புதிய தனியார் நிறுவனம்/ ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிலையில் தற்போது திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தினை ரத்து செய்து, புதிய ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்புவது, அரசின் புதிய வழிகாட்டு நெறிமுறைகளுக்கு முரண்பாடானதாகும்.

எனவே, இச்சூழ்நிலையை கருத்தில் கொண்டு நிர்வாக நலன் கருதியும் மற்றும் பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதியும் தற்போது பணிபுரிந்து வரும் 100 தூய்மை பணியாளர்களை திரு.K.குமார் ஒப்பந்ததாரர் மூலம் தற்போது பெற்று வரும் நாளொன்றுக்கு நபரொன்றுக்கு ரூ.517.70/– என்ற ஊதிய விகிதத்தில் ஏற்கனவே வழங்கியுள்ள பணி உத்தரவில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்படுத்தி 01.02.2023 முதல் 31.03.2023 வரை இரண்டு மாத காலத்திற்கு மட்டும் ஒப்பந்தத்தினை நீடிப்பு செய்து 01.04.2023 முதல் ரத்து செய்யவும், அதன்படி பணி உத்தரவு வழங்கவும், அதற்காகும் செலவினத்தொகை ரூ.31.58 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதி திரு.K.குமார் ஒப்பந்ததாரரின் ஒப்பந்த காலத்தினை 01.02.2023 முதல் 31.03.2023 வரை இரண்டு மாத காலத்திற்கு மட்டும் நீடிப்பு செய்து பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. 01.04.2023 முதல் மேற்படி ஒப்பந்ததாரரை ரத்து செய்யலாம்.
4. இச்செலவினத்தை SUC நிதி மற்றும் பொது நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2576/2019/எச்1**

**நகர்மன்ற தீர்மானம் எண். 497 நாள்.23.01.2023.**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒம்)/நளினி சுரேஷ்பாபு,
நகர் மன்ற தலைவர்,
திருச்செங்கோடு நகராட்சி.

//உண்மைநகல்//

ஆணையாளர்,
திருச்செங்கோடு நகராட்சி.